**செய்தி வெளியீடு எண்: 631** **நாள்: 19.10.12**

**<u>செய்தி வெளியீடு</u>**

வளர்ந்து வரும் நகர்ப்புற மக்கட்தொகை மற்றும் தொடர்புடைய வணிக நடவடிக்கைகளுக்கு ஏற்ப நகரக் கட்டமைப்புகளை விரிவுபடுத்துவதிலும், மேம்படுத்துவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு "ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்" என்ற ஒரு திட்டத்தினை தொடங்கி அதனை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்படி, நகர்ப்பகுதிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர், கழிவு நீர் அகற்றல், சுகாதாரம், மழைநீர் வடிகால், சாலைகள், தெருக்கள், திடக் கழிவு மேலாண்மை மற்றும் வாகன நிறுத்துமிடம், பேருந்து நிலையம், பூங்காக்கள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்த உத்திரவிட்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இதற்கென நிதியினை ஒவ்வொரு ஆண்டும் விடுவித்து வருகிறார்கள். இதன் அடிப்படையில், பல்வேறு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த ஆண்டு, அதாவது 2012-13 ஆம் ஆண்டிலும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடர்ந்து செயல்படுத்திட, சென்னை தவிர பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு 500 கோடி ரூபாயும், பேரூராட்சிகளுக்கு 250 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் அனைத்து உள்கட்டமைப்பு பணிகளும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவு பெற வேண்டும் என்பதை கருத்தில் கொண்டும், நிர்வாக அமைப்பினை முறைப்படுத்தி வலுப்படுத்தும் வகையிலும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன் அடிப்படையில், பேரூராட்சிகளில் காலியாக உள்ள 1,286 பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

2015-ஆம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டில் பொது இடங்களில் மலம் கழிப்பதை முற்றிலும் ஒழிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு உறுதி பூண்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, புதிய பொதுக் கழிப்பிடங்கள் அமைக்கவும், தற்பொழுதுள்ள கழிப்பிடங்களுக்கு தண்ணீர் வசதி மற்றும் மின்சார வசதி ஆகிய பணிகளுக்காக கடந்த 2011-12 ஆம் ஆண்டு ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு, முதற்கட்டமாக 19.83 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டம் துவக்கப்பட்டது. இதன் மூலம் 52 பேரூராட்சிகளில், 52 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டதுடன் 62 பேரூராட்சிகளில் உள்ள 75 சுகாதார வளாகங்கள் புனரமைக்கப்பட்டன. அதேபோல் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள

658 கழிவறைகள் புனரமைக்கப்பட்டதுடன் மற்றும் புதியதாக 253 கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன.

மேலும், இந்த ஆண்டு, அதாவது 2012-13 ஆம் ஆண்டு மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பொது கழிப்பிடங்களை மேம்பாடு செய்யவும் மற்றும் புதிய பொது கழிப்பிடங்களை கட்டுவதற்கும், அரசு மானியமாக 36 கோடியே 30 லட்சம் ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 18 கோடியே 15 லட்சம் ரூபாயும், அடிப்படை கட்டமைப்பு நிதியை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையின் கீழ் 18 கோடியே 15 லட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 72 கோடியே 60 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

********

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :- 19.10.2012.